# DEPOSITION OF WITNESS(CIVIL)
# IN THE COURT OF I ADDITIONAL JUDGE.

**Case No. : O.S. No.6889/2014** **Date: 29.01.2026**

**DW- 1.**

Name : Mr.C.K.Annamalai.

Father's Name :

Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of January 2026.

---

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வழக்கு சொத்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்து ஆகும். என்னுடைய மாமனார் எம்.சுப்பிரமணியம் பெயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் சொத்திற்கு எவ்வளவு மதிப்பு போடப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்தை ஒதுக்கீடு செய்யும் போது அதன் மதிப்பு ரூபாய்.5,625/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 18.03.1965 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. என் மாமனார் சுப்பிரமணியப்பிள்ளை 1976 ஆம் வருடம் இறந்தார். என் மாமனார் சுப்பிரமணியப்பிள்ளைக்கு ஜெயமோகன், பாஸ்கரன் மற்றும் என்னுடைய மனைவி லலிதா குமாரி ஆவார்.பாஸ்கரன் திருமாணம் ஆகாமலேயே 1964 ஆம் வருடம் இறந்துபோனார். சுப்பிரமணியன் மனைவி கங்காபாய் அவர் 1996 ஆம் வருடம் இறந்துவிட்டார். ஜெயமோகன் 2014 ஆம் வருடம்

இறந்தார். ஜெயமோகன் வாரிசுகள் இவ்வழக்கின் வாதிகள். என் மனைவிக்கு நானும், 3, 4 பிரதிவாதிகளும் வாரிசுகள் ஆவோம். சுப்பிரமணியம் உயிருடன் இருக்கும்போது வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தவேண்டிய தொகைகளை முழுமையாக செலுத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீட்டுவசதி வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகளை இறந்துபோன ஜெயமோகன் செலுத்தினார் என்றால் அதை நான் மறுக்கிறேன். வீட்டு வசதி வாரித்திலிருந்து கூடுதல் தொகை ரூபாய்.4,237/– செலுத்தவேண்டும் என அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன தொகையையும் இறந்துபோன ஜெயமோகன் செலுத்தினார் என்றால் அதை நான் மறுக்கிறேன். சுப்பிரமணியப்பிள்ளை இறந்து பிறகு வாரிசுகள் பெயரில் பெயர் மாற்றம் செய்ததற்கு அனைத்து வாரிசுகளும் ஆட்சேபனைஇல்லா கடிதம் கேட்டதற்கு எனது மனைவி மறுத்துவிட்டார் என்றால் அதை நான் மறுக்கிறேன். எனது மாமியார் 26.12.1996 ல் இறந்துபோனார். ஜெயமோகன் உயிருடன் இருக்கும்போது எனது மனைவியிடம் ஆட்சேபனை இல்லா கடிதம் கொடுப்பதற்கு கோரியுள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். என் மனைவி உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால் இருக்கலாம். அவரது உடல்நிலையில் என்ன பாதிப்பு என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகள் ஒரு முன் அறிவிப்பு எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் வழக்கு முன் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் நாங்கள் ராயப்பேட்டையில் வசித்து வந்தோம். வாதிகள் அந்த அறிவிப்பை இந்திரா நகர் முகவரிக்கு அனுப்பியுள்ளனர். வா.சா.ஆ.19 நான் அனுப்பிய பதில் அறிவிப்பு ஆகும். சுந்தராஜன் என்பவர்

எனக்கு அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் சொத்து சம்பந்தமாக என் மனைவியும் ஜெயமோகனும் முடிவு செய்து கொள்ளவேண்டும் என்றும் என்னை எந்தவித தொந்தரவும் செய்யவேண்டாம் என்று அனுப்பியுள்ளேன். என் மனைவி அனுப்பிய பதில் அறிவிப்பு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு பாதி பங்கு உள்ளது என்றும், மீதி பங்கு பிரதிவாதிகளுக்கும் உள்ளது என்று சொன்னால் சரிதான். குடும்பத்தில் லாப நஷ்டங்கள் நிறைய உள்ளன. அவைகளை சரிசெய்ய வேண்டும்.

**(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளை ஏற்று குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dt. 29.01.2026

I Addl. District Judge.